**CC.No. 11/2015**

**P.W.1**

| திரு. சந்திரபோஸ் | த/பெ. திரவியம் | Date: 09.02.2026 |
|---|---|---|

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused A1 and A2 present, A3 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு

**<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

1. 2 மற்றும் 3 எதிரிகள் மீது புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எதற்காக கொடுத்தேன் என்றால் என்னுடைய காசோலையை அண்ணா நகரை சேர்ந்த சுப்பையா என்பவரிடம் கொடுத்தேன். ரூ. 50,000/- அவரிடம் கடனாக வாங்கியிருந்தேன். அதற்காக நான்கு காசோலைகளை சுப்பையாவிடம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்துவிட்டு சுப்பையாவிடம் காசோலைகளை கேட்டேன். அதற்கு அவர் எனது காசோலைகளை 2 வது எதிரி மாணிக்கத்திடம் விற்று விட்டதாக சொன்னார். அதன் பிறகு வள்ளியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த காசோலையை பயன்படுத்தி 3 வது எதிரி என் மீது வழக்கு போட்டார். அதனால் 2 மற்றும் 3 எதிரிகள் மீதும் புகார் கொடுத்தேன்.

2) 08.04.2014 ம் தேதி புகார் கொடுத்தேன். காசோலைகளை 1 வது எதிரி 2 வது எதிரியிடம் விற்று விட்டதாக சொன்னார். அதனால் 2 வது எதிரி மீது புகார் கொடுத்தேன். அவ்வாறு விற்று இருந்தாலும் விற்பது கிரிமினல் குற்றம் இல்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே பல நபர்களிடம் பணம் வாங்கி காசோலை கொடுத்ததில் இருந்து தப்பிக்க வேண்டி பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகார் மனு 08.04.2014(அ.சா.ஆ.1) ம் தேதி நான் வள்ளியூர் காவல் நிலையத்தில் கொடுத்தது என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் 08.04.2014 அன்று வள்ளியூரில் வைத்து சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) அப்படி ஒரு சம்பவம் நடக்காததால் தான் புகார் மனுவில் சம்பவ தேதி குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவில் 2 வது எதிரி மாணிக்கம் என்னை அசிங்கமாக ஏசியதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

போலீசார் விசாரணையிலும் 2 வது எதிரி அசிங்கமாக ஏசியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். 3 வது எதிரி பற்றி புகார் மனுவில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் 3 வது எதிரி கோட்டைசாமிக்கு சம்பந்தமாக இருப்பதாக கூறவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் 2,3 எதிரிகள் பற்றி புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பல இடங்களில் வாங்கிய பணத்திற்கு கொடுத்த காசோலை வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

4) இந்நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்ய தாக்கல் செய்த மனுவில் 2,3 எதிரிகள் மீது பெயர் குறிப்பிட்டோ எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த மனு என்றால் சரிதான். அதில் 2,3 எதிரிகள் பெயர் இல்லை என்றால் சரிதான். என் மீது சுமார் மூன்று காசோலை வழக்குகள் வேறு நபர்கள் தாக்கல் செய்தார்கள். அந்த வழக்குகளை சமரசமாக முடித்து விட்டேன். நான் குற்ற நிகழ்வு சம்பவம் எதுவும் நடைபெறாமல் கொடுத்த புகார் மனு தள்ளுபடி செய்யபடவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.02.09 20:24:53 +0530

Judicial Magistrate,
Valliyoor.